மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்

இரண்டாம் தவணை– 2020

தரம் - 11 புவியியல் கற்றல் கையேடு-1

அலகு:-3 கற்றல் காலம்:- 6பாடவேளை

# உலக சனத்தொகை

- ❖ உலகில் உயிர் வாழும் மனிதர்களின் மொத்த எண்ணிக்கையே உலக சனத்தொகை எனப்படும்.
- ❖ உலகின் தற்போதய சனத்தொகை **7.8 பில்லியன்** (16-04-2020) அதாவது 7,778,178,250பேர்

❖ ***உலக சனத்தொகையின் பண்புகளாவன***.(பண்பு என்பதை இயல்புORஅம்சம் என்பர்)

- சனத்தொகைப் ***பருமன்***
- சனத்தொகை ***வளர்ச்சி***
- சனத்தொகைப் ***பரம்பல்***
- சனத்தொகைக் ***கட்டமைப்பு***

❖ ***சனத்தொகையில்***

- மனிதன் பிறக்கும் போதே உரித்தாகின்ற அம்சம்:- **மனிதஇனம், வயது**
- மனிதன் பிறந்த பின்னர் உரித்தாகின்ற அம்சம்:- **தேசியம், சமயம், மொழி,எழுத்தறிவு**

❖ ***மனிதன் ஒரு வளமாகக் கருதப்படுவதற்கான காரணங்கள்***

- புவியின் மீதுள்ள அனைத்துப் பௌதிக வளங்களையும் பயன்படுத்துகின்ற அல்லது நுகருகின்ற மனிதன் வளமாவான்.
- ஒருநாட்டின் அபிவிருத்திச் செயன்முறையை முன்னெடுக்கும் மனிதன் வளமாவான்.
- மனிதன் தனது அறிவு, திறன், அனுபவத்தைக் கொண்டு இயற்கை வளங்களை பொருளாதார வளமாக மாற்றுவதால் மனிதன் வளமாவான்

❖ அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சனத்தொகை வளர்ச்சி **குறைவாகவும்** , அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சனத்தொகை வளர்ச்சி **உயர்வாகவும்** உள்ளது.




kalvi.lk

- *அபிவிருத்தி செயன்முறையில் சனத்தொகை வளர்ச்சியை விரும்பத்தக்கநிலையில் பேணிக் கொள்வது மிகவும் முக்கியம்.*


- **உலக சனத்தொகைப் பருமன்**

- **கண்டங்களின் அடிப்படையில் உலக சனத்தொகைப் பருமன்** ( வீதம்- **%** )




- *உலகின் மொத்த சனத்தொகையில் ஆசியா மற்றும் ஆபிரிக்கா கண்டங்களில்* ***76%*** *மக்கள் வாழ்கின்றனர்*

- **உலக நாடுகளின் அடிப்படையில் சனத்தொகைப்பருமன்** (முதல் 10 நாடுகள்)




- ***சனத்தொகை வளர்ச்சி*** :- குறித்த காலப்பகுதியில் சனத்தொகையில் ஏற்படும் அதிகரிப்பு சனத்தொகை வளர்ச்சி எனப்படும்

- ***சனத்தொகை வளர்ச்சியை தீர்மானிக்கும் காரணிகள்***
    - பிறப்பு வீதம்
    - இறப்பு வீதம்




kalvi.lk

- தேறிய குடிப்பெயர்வு வீதம்

❖ **உலக சனத்தொகை வளர்ச்சிக் காலகட்டம் இரண்டு வகைப்படும் அவையாவன.**

1. *நீண்டகாலமாக மிகவும் மெதுவாக சனத்தொகை வளர்ச்சியடைந்த காலம்* .
(மனித இனத்தின் தோற்றம் தொடக்கம் 1750ஆம் ஆண்டுவரை) **(இங்கு பிறப்பு, இறப்பு உயர்வாக இருந்தது)**

2. *குறுகிய காலத்துள் சனத்தொகை வேகமாக வளர்ச்சியடைந்த காலம்* .
(1750 ஆம் ஆண்டின் பின்னான காலம்) **(இங்கு பிறப்பு அதிகம் இறப்பு குறைவாக இருந்தது)**

❖ 


❖ கி.பி. 1800 இல் **ஒரு** பில்லியனாக இருந்த உலக சனததொகை 2012 இல் **7** பில்லியனாக அதிகரித்துள்ளது

❖ இந்த நூற்றாண்டின் அதாவது இருபத்தோராம் நூற்றாண்டின் இறுதியாகும் போது அது **பதினொரு பில்லியன் வரை அதிகரிக்கும்** என மதிப்பிடப்பட்டுள்ளது

❖ தற்போது உலக சனத்தொகை ஆண்டுக்கு **84 மில்லியன் வீதம்** வளர்ச்சியடைகின்றது. அதாவது ஆண்டு வளர்ச்சி வீதம் **1.2** ஆகும்.

❖ **உலக சனத்தொகை வளர்ச்சி வேகம்-உலகின் சனத்தொகை உயர்வான நாடுகள்** 1990 – 2010

- ஆபிரிக்கக் கண்ட நாடான நைஜீரியாவின் வளர்ச்சி வேகம் உயர்வாகும்
- சீனாவை விட ஏனைய ஆசியநாடுகளின் வளர்ச்சி உயர்வு
- அபிவிருத்தி அடைந்த நாடான ரஷ்யா, யப்பான் வளர்ச்சி குறைவாகும். ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சி உயர்வாக உள்ளது.

| நாடு | வளர்ச்சி வேகம் |
|---|---|
| *சீனா* | 17.1% |
| *இந்தியா* | 40.2% |
| *ஐக்கிய அமெரிக்கக் குடியரசு* | 22.5% |
| *பிரேசில்* | 30.3% |
| *பாகிஸ்தான்* | 55.3% |
| *நைஜீரியா* | 62.3% |
| *பங்களாதேஷ்* | 41.3% |
| *ரஷ்யா* | 3.6% |
| *யப்பான்* | 4.7% |



kalvi.lk

❖ ***உலக சனத்தொகைப் பரம்பல்***

- புவிமேற்பரப்பில் மனிதன் புவியியல் ரீதியாக பரம்பி வாழ்கின்ற முறை சனத்தொகைப் பரம்பல் எனப்படும்.
- பல்வேறு பௌதிக , மானிடக் காரணிகளின் செல்வாக்குக் காரணமாக உலக சனத்தொகை சமனற்ற முறையில் பரம்பியுள்ளது.
- உலகில் சனத்தொகை **ஐதாக** மற்றும் **அடர்த்தியாக** வாழும் பிரதேசங்கள் உள்ளன.

❖ ***சனத்தொகை அடர்த்தி:-*** குறிப்பிட்ட ஒரு நில அலகினுள் வாழுகின்ற சனத்தொகை சனத்தொகை அடர்த்தி எனப்படும்.


- ஒருநாட்டின் மொத்த சனத்தொகையை அந்நாட்டின் மொத்த நிலப்பரப்பினால் பிரிக்க வருவது சனத்தொகை அடர்த்தி ஆகும். **(இது ஒரு சதுரகிலோமீற்றருக்கு கணக்கிடப்படும்)**

❖ ***உலகில் சனத்தொகைப் பரம்பலுக் கேற்ப உலகை மூன்று பகுதியாக பிரித்துள்ளனர் அவை***

1. உலகில் சனத்தொகை அடர்த்தி கூடிய நான்கு வலயங்கள்
2. உலகின் நடுத்தர அளவான (இரண்டாம் நிலை) சனத்தொகை கொண்டவலயங்கள்(மையம்)
3. உலகில் சனத்தொகை குறைவான (ஐதான) பிரதேசங்கள்

❖ ***உலகில் சனத்தொகை அடர்த்தி கூடிய நான்கு வலயங்கள்***

1. வடகிழக்கு ஐக்கிய அமெரிக்க குடியரசு
2. மேற்கு ஐரோப்பா
3. தெற்கு,தென்கிழக்காசியா
4. கிழக்கு ஆசியா




❖ வடகிழக்கு ஐக்கிய அமெரிக்க கரையோரவலயம் உலகின் இரண்டாவது சனத்தொகைப் பிரதேசம்

❖ **உலகில் சனத்தொகை அடர்த்திமிக்க பிரதேசம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்**

- உலகின் கரையோரத்தை அண்மித்து மக்கள் அடர்த்தி மிக்க வலயம் அமைந்துள்ளது.
- மனிதவாழ்வுக்கு உவப்பான பௌதிகச்சூழல் காணப்படுகின்றமை.
- போக்குவரத்துவசதி,வர்த்தகம்,கல்வி,சுகாதார,மருத்துவ வசதி, உயர்ந்தஉட்கட்டுமானவசதி

- ஆதிகளவில் பொருளாதார நடவடிக்கை உள்ளமை


❖ இவ் வலயங்களில் உலகில் 10% நிலப்பகுதியில் 64% மக்கள் வாழ்கின்றனர்.

❖ ஆதிகளவான மில்லியன் நகரங்கள் இவ்வலயங்களில் உள்ளது.

### ❖ *உலகின் இரண்டாம் நிலை சனத்தொகை மையம்.*

- வட அமெரிக்காவின் கிழக்கு ,மேற்கு, வட கிழக்கு கரையோரவலய மையங்கள். **(நியூயோர்க், பொஸ்ரன், சான்பிரான்ஸ்சிஸ்கோ நகரங்கள் வரை)**
- தென்னமெரிக்காவின் கிழக்கு கரையோர மையங்கள். **(றியோடியெனிரோ நகரம் வரை)**
- நைல்நதிக் கழிமுகப் பிரதேச வலயம் **(எகிப்தின் கெய்ரோ நகரத்தினை அண்டி)**
- மேற்கு ஆபிரிக்காவின் சியாராலியோன் , லைபீரியா, ஐவரிக்கோஸ்ட், கானா போன்ற நாடுகளுக்கு அருகிலுள்ள மையங்கள்

➢ உலக சனத்தொகையில் **80%** இங்கு வாழ்வதுடன், சனத்தொகை அடர்த்தி 65 பேராகும்




### ❖ *உலகில் சனத்தொகை குறைவான (ஐதான) பிரதேசங்கள்*

- குளிர் பாலைவனப் பிரதேசங்கள்( ஆட்டிக்,அந்தாட்டிக்பிரதேசங்கள்)
- வெப்பப் பாலைவனப் பிரதேசங்கள்(சகாரா, மத்தியஅவுஸ்ரேலியா)
- உயர்ந்த மலைப்பிரதேசங்கள் ( இமயமலை, றொக்கிமலை)




kalvi.lk

- அயனமழைக் காட்டுப் பிரதேசங்கள் ( அமேசன், கொங்கோ, பப்புவா நியுகினி)

➢ உலகில் 65% நிலப்பரப்பில் ஐதாக மக்கள் வாழ்கின்றனர்.

➢ இங்கு சனத்தொகை அடர்த்தி ஒருசதுரகிலோமீற்றருக்கு 5-65பேராகும்

➢ ***ஐதாக மக்கள் வாழக் காரணம்:-*** மிக உயரமான நிலம், உவப்பற்ற காலநிலை அதாவது மிகஉயர்ந்த வெப்பமும், அதிகூடிய குளிரும், மிக அடர்ந்த காடுகள் அதிகம் உள்ளமை.




❖ **சனத்தொகையின் சமனற்ற பரம்பல் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டு அவை.**

1. ***பௌதிகக்காரணிகள்***
   - காலநிலை
   - தரைத்தோற்றம்
   - நீர்வடிகாலமைப்பு
   - கனியவளம்

2. ***மானிடக்காரணிகள்***
   - கைத்தொழிலும்,விவசாயமும்
   - நகராக்கமும்,உட்கட்டமைப்புவசதியும்
   - தொழில்நுட்பம்
   - அரசகொள்கை

❖ **காலநிலை**:-

- *மக்கள் செறிவுடைய காலநிலைப் பிரதேசங்கள்*

➢ அயனமண்டலக் காலநிலை,(பருவக்காற்றுக்காலநிலை)

➢ இடைவெப்பவலயக் காலநிலையில் மக்கள் அதிகம் வாழ்கின்றனர்.

- *மக்கள் செறிவு,குறைந்த காலநிலைப் பிரதேசங்கள்*

- வெப்பமான பாலைவனக்காலநிலை நிலவும் பகுதியில் மக்கள் ஐதாக உள்ளனர்.

❖ **தரைத்தோற்றம்**:-

- *மக்கள் செறிவுடைய தரைத்தோற்றம்.*

- இந்து கங்கை சமவெளிப்பிரதேசம் மற்றும் நதிப்பள்ளத்தாக்குப்பிரதேசம்.
- கரையோரச்சமவெளிப்பிரதேசம், வளமான மண் உள்ள தரைத்தோற்றம்.

- *மக்கள் செறிவு குறைந்த தரைத்தோற்றம்.*

- உயர்ந்த மலைப்பகுதிகளில் மக்கள் ஐதாகும். உ-ம் இமயமலை

❖ **நீர் வடிகாலமைப்பு:-**

- *மக்கள் செறிவுடைய நீர்ப்பிரதேசம்.*

- நதிப்பள்ளத்தாக்குப் பிரதேசம், ஏரிகள், தரைக்கீழ் நீர்வளமுள்ள பிரதேசம்
- நதிகளின் கரையோரங்கள்

- *மக்கள் செறிவு குறைந்த நீர்ப்பிரதேசம்*

- நீர்வளம் குறைந்த இடங்களில் மக்கள் ஐது. உ-ம் சகாராபாலைவனம்

❖ **கனியவளம்**:- கைத்தொழிலுக்கு தேவையான கனியவளங்கள் நிறைந்துள்ள இடங்களில் மக்கள் செறிவாகவும் , கனியவளம் குறைந்த இடங்களில் ஐதாகவும் வாழ்கின்றனர்.

❖ **கைத்தொழிலும், விவசாயமும்**:- இப் பொருளாதாரநடவடிக்கைகள் சிறப்பாக உள்ள இடங்களில் வேலைவாய்ப்பு அதிகம் அதனால் மக்கள் செறிவாக உள்ளனர் பொதுவாக இரண்டாம் நிலைப்(கைத்தொழில்) பொருளாதார மையங்களில் மக்கள் செறிவாகவும் , முதல் நிலைப்(விவசாயம்) பொருளாதாரத்தில் ஐதாகவும் உள்ளனர்.

❖ **நகராக்கமும், உட்கட்டமைப்பு வசதியும்** :- நகரங்களில் அனைத்து வசதிகளும் உயர்வாக உள்ளது. உ-ம். கல்வி,மருத்துவம் உயர்தரமானது. கிராமங்களில் இவ்வசதிகள் குறைவு அதனால் மக்கள் ஐதாக உள்ளனர்

❖ **தொழில்நுட்பம்**:- நகரமயமான பிரதேசத்தில் நவீன தொழில் நுட்பம் அதிகம் கிடைக்கும் அனைத்து சேவைகளும் தொழில்நுட்பத்துடன் இணைந்ததாக இருக்கும் இதனால் மக்கள் அதிகம் . கிராமத்தில் இவை அதிகளவில் பெறமுடியாது அதனால் மக்கள் ஐதாகும்.

❖ **அரசகொள்கை:-** அரசாங்கம் திட்டமிட்டு சில இடங்களில் அபிவிருத்தியை மேற்கொள்ளும் போது அங்கு வேலைவாய்ப்பு அதிகம் மக்கள் செறிவாக இருக்கும். உ-ம் கட்டுநாயக்கா,பியகம, கொக்கல முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தை அண்டி மக்கள் அதிகம். அபிவிருத்தி செய்யாத இடங்களில் மக்கள் ஐதாக உள்ளனர்..உ-ம் அனலைதீவு



kalvi.lk

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்

இரண்டாம் தவணை– 2020

தரம் - 11 புவியியல் கற்றல் கையேடு-2

அலகு:-4 கற்றல் காலம்:- 5பாடவேளை

## இலங்கையின் சனத்தொகை

- தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தினால் இலங்கையின் சனத்தொகை பற்றிய தரவுகள் சேகரிக்கப்படுகின்றது.
- இலங்கை முழுவதற்குமான சனத்தொகைக் கணக்கெடுப்பு 1971ஆம் ஆண்டு முதன் முதலில் கணக்கெடுக்கப்பட்டது.
- பொதுவாக பத்து (10) வருடங்களுக்கு ஒருமுறை சனத்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.
- இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் நாடாக இருந்தபோதிலும் சனத்தொகையின் பண்புத்தர அம்சங்களின்படி அபிவிருத்தி அடைந்த நாட்டின் பண்பைக் கொண்டுள்ளது.
- சிசுமரணம், கர்ப்பிணித்தாய் இறப்பு, ஆயுள் எதிர்பார்ப்பு, எழுத்தறிவு, ஆகிய சனத்தொகையின் பண்புத்தர அம்சங்கள் இலங்கையில் சிறப்பாக உள்ளது. இதற்கு இலவசக் கல்வி, இலவச சுகாதாரம், இலவச மருத்துவம் காரணங்களாகும்.

### ❖ இலங்கையின் சனத்தொகைப் பண்புகள்

- சனத்தொகைப் ***பருமன்***
- சனத்தொகை ***வளர்ச்சி***
- சனத்தொகைப் ***பரம்பல்***
- சனத்தொகைக் ***கட்டமைப்பு***

### ❖ *இலங்கையின் சனத்தொகைப் பருமன் .*

- இலங்கை முழுவதும் இறுதியாக 2012ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுக்கப்பட்டது. அதன்படி இலங்கையின் சனத்தொகை 20.2 மில்லியன் ஆகும்
- இலங்கையின் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுரகிலோமீற்றருக்கு 323 பேராகும்.(2012)
- தென்னாசியாவில் ஆண்டுக்கான சனத்தொகை வளர்ச்சி வேகம் குறைந்த நாடு இலங்கை.
- தென்னாசியாவின் சனத்தொகைப் பருமனில் இலங்கை ஐந்தாம் இடத்தில் உள்ளது.
- இலங்கையின் சனத்தொகை **1871 ஆம் ஆண்டில் 2.4** மில்லியனாகி **இன்று 21.2** (16-04-2020) மில்லியனாக அதிகரித்துள்ளது.



kalvi.lk

### ❖ *இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி.*

- சனத்தொகை வளர்ச்சி என்பது குறிப்பிட்ட நிலப்பரப்பினுள் ஏற்படும் சனத்தொகை அதிகரிப்பாகும்
- இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி அடைந்து வருகின்றது.

### ❖ *இலங்கையின் சனத்தொகை வளர்ச்சிக் காலகட்டம் மூன்று வகையாகப் பிரிக்கலாம் அவையாவன.*

- **1871 தொடகக்ம் 1946** வரையிலுள்ள குடிசனத்தொகை மந்தமான வளர்ச்சியடைந்த காலப்பகுதி
- **1946 தொடக்கம் 2000** விரையில் குடிசனத்தொகை சார்பளவில் வேகமாக வளர்ச்சியடைந்த காலப்பகுதி
- **2001 தொடக்கம் இற்றை வரை** மீண்டும் வளரச்சி வேகம் படிப்படியாகக் குறைந்து செல்லும் காலப்பகுதி.
- **2012 ஆம் ஆண்டின்** வளர்ச்சி வீதம் **0.7%** ஆக குறைந்துள்ளது. இதற்குக் காரணம் இயற்கையான வளர்ச்சிவீதம் குறைதலும், சர்வதேச இடப்பெயர்வு அதிகரித்தலுமாகும்.
- பறப்பு மற்றும் இறப்பு என்பன **இயற்கை வளர்ச்சி வீதத்தை தீர்மானிக்கின்றது**.

### ❖ *இலங்கையின் சனத்தொகை வளர்ச்சியில் பிரதேசவேறுபாடு*

- உலர் வலய மாவட்டங்களில் சனத்தொகையின் ஆண்டுக்கான வளர்ச்சி வீதம் உயர்வாக உள்ளது. **உ-ம்.அநுராதபுரம்- 1.33% ஆகும்.**
- ஈரவலய மாவட்டங்களில் சனத்தொகையின் ஆண்டுக்கான வளர்ச்சி வீதம் மிகக்குறைவாக உள்ளது. **உ-ம்.கொழும்பு-0.35%, நுவரேலியா-0.05% ஆகும்.**
- களுத்துறை, கம்பஹா போன்ற ஈரவலய மாவட்டங்களில் சனத்தொகை வளர்ச்சி உயர்வுக்கு காரணம் இடப்பெயர்வாகும்.

### ❖ *இலங்கையின் சனத்தொகைப் பரம்பல்*

- **மேல் மாகாணம் அதிகளவு மக்கள் பரம்பலைக் கொண்டது. (28.8%)**
- அதிகளவு சனத்தொகையைக் கொண்டது **கொழும்பு** மாவட்டமாகும். (2,323,826பேர்)
- வர்த்தகம்,கல்வி, சேவை என்பன உயர்தரத்தில் இருப்பதால் கொழும்பில் மக்கள் அதிகம்.
- கட்டுநாயக்கா, பியகம சுதந்திர வர்த்தக வலயம் கம்பஹாவில் உள்ளதால் கொழும்பு, கம்பஹாவில் மக்கள் அதிகம்.



kalvi.lk

- வட மாகாணம் மிகக் குறைந்தளவு மக்கள் பரம்பலைக் கொண்டது.(5.2%)
- குறைந்தளவு சனத்தொகையைக் கொண்டது **முல்லைத்தீவு** மாவட்டமாகும். (92,228பேர்)
- வர்த்தகம், கல்வி, சேவை உயர்தரத்தில் இல்லாமையும், வேலைவாய்ப்பு இன்மை, யுத்தத்தினால் ஏற்பட்ட இடப்பெயர்வு வடக்கில் மக்கள் குறைவாக இருக்க காரணமாகும்.

- **இலங்கையின் கிராம, நகர சனத்தொகைப் பரம்பல்**
  - கிராம சனத்தொகை - 77.3%
  - நகர சனத்தொகை - 18.3%
  - பெருந்தோட்ட சனத்தொகை- 4.4%
- இலங்கையில் அதிகளவில் கிராம சனத்தொகையே காணப்படுகிறது.
- நகர சனத்தொகை மேல் மாகாணத்தில் அதிகமாக உள்ளது.

### ❖ *இலங்கையில் சனத்தொகைக் கூட்டு*

- இலங்கை பல்இன, மதங்களைக் கொண்ட நாடாகும்.
- பெரும்பான்மை இனம்-சிங்களவர், பெரும்பான்மை சமயம்- பௌத்தம்
- இலங்கையின் வடகிழக்கில் தமிழர் அதிகம் வாழ்கின்றனர்.

**2012ஆம் ஆண்டு இலங்கையின் சனத்தொகைக் கூட்டு~ இனம், சமயம்**

| **இனம்** | % | **சமயம்** | % |
|---|---|---|---|
| **சிங்களவர்** | 74.9% | **பௌத்தம்** | 70.2% |
| **இலங்கைத் தமிழர்** | 11.2% | **இந்து** | 12.6% |
| **இந்தியத் தமிழர்** | 4.2% | **இஸ்லாம்** | 9.7% |
| **இலங்கை முஸ்லீம்கள்** | 9.2% | **றோமன் கத்தோலிக்கம்** | 7.6% |
| **ஏனையோர்** | 0.5% | **ஏனைய கிறிஸ்தவம்** | 0.1% |

### ❖ *இலங்கையின் சனத்தொகைக் கட்டமைப்பு*

- சனத்தொகைக் கட்டமைப்பில் **பால், வயது** வேறுபாடு பிரதானமாக உள்ளது.
- இலங்கையில் **ஆண்கள்~48.5%** உம்,**பெண்கள்~51.5%** உள்ளனர். பெண்கள் அதிகமாகும்.
- இலங்கையில் **15 வயதுக்குக் குறைந்தோர்** 25.8%, **15-55 வயதுக்கு இடைப்பட்டோர்** 62.0%, **60வயதுக்கு மேற்பட்டோர்** 12.2% உள்ளனர்.

Education கல்வி அධ්‍යාපන

## ❖ இலங்கையின் சனத்தொகைக் கட்டமைப்பின் விசேட பண்புகள்

- இளவயதுப்பிரிவினரின் சனத்தொகை குறைந்து வருகின்றது.
- முதியோர் சனத்தொகை அதிகரித்து வருகின்றது.
- பெண்களின் சனத்தொகை அதிகரித்து வருகின்றது.
- ஊழியப்படை குறைந்து செல்கின்றது.
- 59வயதுக்கு மேற்பட்ட தங்கியிருப்போர் எண்ணிக்கை அதிகரித்தல் சனத்தொகை முதுமையடைதல் எனப்படும்.


### முதுமையடைதலுக்கான காரணங்கள்

- பிறப்புவீதம் படிப்படியாகக் குறைவடைந்து வருதல்
- ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல்

### முதியோர் சனத்தொகை அதிகரிப்பதால் ஏற்படும் பிரச்சினைகள்

- உற்பத்திக்குப் பங்களிக்காது அதிகளவை நுகர்கின்றனர் இதனால் செலவு அதிகம்
- பிள்ளைகள் முதியோரைக்கைவிடல் OR முதியோர் இல்லத்தில் விடல்
- முதியோரால் வீட்டில் முரண்பாடு ஏற்படல்
- பராமரிப்புச்செலவு அதிகரித்தல்
- இளையவர்களுக்கு வேலை இல்லாது போதல்






kalvi.lk

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்

இரண்டாம் தவணை– 2020

தரம் - 11 | புவியியல் | கற்றல் கையேடு-3

அலகு:-5 | கற்றல் காலம்:- 8பாடவேளை

# அபிவிருத்தி

## ♣ அபிவிருத்தி பற்றிய எண்ணக்கருக்கள்

- ✓ அபிவிருத்தி என்பது இயங்கு தன்மை கொண்ட எண்ணக்கருவாகும்.
- ✓ இது வரையறுக்க முடியாத தொடர்ச்சியான செயன்முறையாகும்.
- ✓ காலத்துக்கு ஏற்ப மாறுபடக் கூடியது.

## ♣ அபிவிருத்தி என்றால் என்ன?

- ✓ 20 ஆம் நூற்றாண்டின் அரைப் பகுதிவரையில்:- **ஒரு நாட்டில் நிலவிய பொருளாதார அபிவிருத்தியே அபிவிருத்தி எனப்படும்.** இதை அளவிட பயன்பட்ட குறிகாட்டிகள்
  - மொத்தத்தேசிய உற்பத்தி
  - தலாவீத வருமானம்
  - தலாவலுசக்தி நுகர்வு
  - 1000மக்களுக்கு வானொலிகள்.
  - 1000மக்களுக்கு தொலைபேசிகள்

- ✓ 20 ஆம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதிவரையில்:- **ஒரு நாட்டில் நிலவிய பொருளாதார அபிவிருத்தியோடு சமூக அபிவிருத்தியும் ஏற்படல் அபிவிருத்தி எனப்படும்**. இதை அளவிட பயன்பட்ட குறிகாட்டிகள் (நவீன குறிகாட்டிகள்)
  - சிசுமரணவீதம்
  - எழுத்தறிவுவீதம்
  - பிரசவமரணவீதம்
  - பிறப்பின் போது ஆயுள்எதிர்பார்ப்பு
  - தகவல் தொடர்பாடல் வசதிகள்
  - சுகாதார வசதிகள்
  - கல்விக்கான சந்தர்ப்பங்கள்
  - அரசியல் தீர்வினை எடுக்கும் சுதந்திரம்
  - கொள்வனவு சக்தி
  - வருமான வேறுபாடு

- ✓ சமூக அபிவிருத்தி என்பதில் உணவும் போஷாக்கும், ஆரோக்கியம், கல்வி, வீடு, சமூகப்பாதுகாப்பு, ஆடை அணிகள், ஓய்வு, மனித சுதந்திரம் என்பவற்றில் ஏற்படும் வளர்ச்சியாகும்.



kalvi.lk

- ✓ அபிவிருத்தி என்பது உலக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதலாகும். (முதலாம் அபிவிருத்தி தசாப்தம் 1960 - 1970 ஐ.நா. அமைப்பு)
- ✓ 1980, 1990 ஆம் ஆண்டுகளில் :- சூழலின் தரத்திலும், நிலைபேண் அபிவிருத்தியிலும் குவிமையப்படுத்தப்பட்டது.
- ✓ **சமூக, பொருளாதார, சூழல் போன்ற துறைகளின் இடைத்தொடர்பின் மூலம் முத்துறைகளில் ஏற்படும் அபிவிருத்தி நிலைபேண் அபிவிருத்தி எனப்படும்**
- ✓ சனத்தொகை, சமூக , கலாச்சார, மற்றும் ஒழுக்கம் ஆகிய காரணிகளுடன் தொடர்புபட்டுள்ள தொடர்ச்சியான செயன்முறை அபிவிருத்தி எனப்படும். (1981/1990- U N O
- ✓ **யாதேனும் நாட்டின் வறுமை ஒழித்து , தொழில் வாயப்புக்கள் அதிகரித்து வருமானம் பிரிந்து செல்வதில் ஏற்றத்தாழ்வுகள் நீங்குமாயின் அது அபிவிருத்தியாகும்-டட்லி சியர்ஸ்**

## ♣ அபிவிருத்தியை அளவிடும் குறிகாட்டிகள்

| அபிவிருத்தியை அளவிடும் குறிகாட்டிகள் | |
|---|---|
| பழையகுறிகாட்டிகள் | நவீன குறிகாட்டிகள் |
| **1.மொத்ததேசிய உற்பத்தி** | 1.பௌதிகவாழ்க்கைப்பண்புச்சுட்டெண் (PQLR) |
| **2.தலாவீதவருமானம்** | 2.மானிட அபிவிருத்திச்சுட்டெண் (HDI) |
| **3.நாட்டின் மொத்த அபிவிருத்தி** | 3.மனிதவறுமைச் சுட்டெண் (HPI) |
| | 4.மனித அமுக்கச்சுட்டெண்(HPI) |

- **பழையகுறிகாட்டிகள் மூலம் உலகநாடுகள் மூன்று பிரிவாக்கப்பட்டது அவை.**
  - விருத்தியடைந்த அபிவிருத்தி மட்டம்
  - நடுத்தர அபிவிருத்தி மட்டம்
  - குறைந்த அபிவிருத்தி மட்டம்
- 1990-1999 இல் மானிட அபிவிருத்திச் சுட்டெண் அறிமுகமானது.
- 2010 இற்கு முன்னர் மனித அபிவிருத்தி சுட்டியை தயாரிக்கும் போது மூன்று குறிகாட்டி உள்ளடக்கப்பட்டது. அவை
  - **பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு,**
  - **எழுத்தறிவு,**
  - **கொள்வனவு சக்தி என்பன.**
- தற்காலத்தில் மனித அபிவிருத்திச் சுட்டியைத் தயாரிக்கும் போது மூன்று குறிகாட்டி உள்ளடக்கப்பட்டது. அவை
  - **பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு ,**
  - **கல்வி அறிவு,**


kalvi.lk

- **கொள்வனவு சக்தி என்பன.**

- மானிட அபிவிருத்திச்சுட்டெண்ணின்படி உலகநாடுகளை **நான்கு வகையாகப் பிரிவாக்கலாம் அவையாவன.**
  - மானிட அபிவிருத்தி மிக உயர்வாக உள்ள நாடுகள்
  - மானிட அபிவிருத்தி உயர்வாக உள்ள நாடுகள்
  - இடைத்தர மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள்
  - தாழ் மட்ட மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள்
- மானிட அபிவிருத்தி உயர்வாக உள்ள சார்க் நாடு இலங்கை ஆகும். 2012இல் 0.715 HDI பெறுமானத்துடன் உலகில் 92ஆவது நாடாக இலங்கை உள்ளது.

## நிலைபேண் அபிவிருத்தி

- இதனை பேண்தகு அபிவிருத்தி எனவும் அழைப்பர்.
- அபிவிருத்தி எண்ணக்கரு சார்பாக பொருளாதார அம்சங்களின்பால் கூடுதல் கவனம் செலுத்தப்படுவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள்
  - வளங்களின் மிகை நுகர்வு
  - வளங்களின் சமமின்மை
  - மனிதன் சூழல் மீது கரிசனை காட்டாமை
  - வளங்கள் தேய்வுறுதல்
  - சுற்றாடல் மாசடைதல்
  - இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்தல்
  - காலநிலை மாற்றங்கள்

Education கல்வி අධ්‍යාපන

- **பொருளாதார அபிவிருத்தியின் பாதகமான விளைவைக் குறைக்க** அபிவிருத்தி செயற்பாட்டில் சூழல் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி முகாமைத்துவம் ஆகியவற்றை ஒன்றிணைத்தல் பேண்தகு அபிவிருத்தியில் இடம்பெறுகின்றது.
- **எதிர்காலத்தைக் கவனத்திற்கொண்டு மனிதவாழ்க்கையின் இருப்பையும் கோலத்தையும் மேம்படுத்துதல் பேண்தகு அபிவிருத்தி எனப்படும்.**
- அதன்படி அபிவிருத்திச் செயன்முறையின் போது சூழல் தேவைகள், சமூகத் தேவைகள், பொருளாதாரத் தேவைகள் ஆகியவற்றினடிப்படையில் அபிவிருத்தி முகாமையை நெறிப்படுத்துவதே பேண்தகு அபவிருத்தி அணுகுமுறையின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.
- **சூழல் முகாமைத்துவத்துடன் அபிவிருத்திச் செயன்முறையின் முகாமைத்துவம் ஒன்றிணைக்கப்படுதல் நிலைபேண் அபிவிருத்தியின் நோக்கமாகும்.**

## இலங்கையின் அண்மைக்கால அபிவிருத்தி நடவடிக்கைகள்

- நீர்வள நாகரிககாலத்தில் இலங்கை **தன்னிறைவுப் பொருளாதாரத்தைக்** கொண்டிருந்தது.
- மேலைத்தேயத்தவரின் வருகையால் **ஏற்றுமதி, இறக்குமதிப்** பொருளாதார நாடாகியது.
- சுதந்திரத்தின் பின்னர் விவசாயக் குடியேற்றம், பாரிய கைத்தொழில், சுதந்திர வர்த்தகவலயம் மூலம் அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்டது.
- **தற்போது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் இடம் பெறுகின்றது.**
- உட்கட்டமைப்பு அபிவிருத்தி மூலம் மனிதவள அபிவிருத்திக்குப் பங்களிக்கலாம்

### இலங்கையில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதால் ஏற்படும் நன்மைகள்

- நாட்டின் புதிய பிரதேசங்கள் அபிவிருத்திக்குத் திறக்கப்படும்.
- சந்தைகள் விரிவடையும்
- உற்பத்திகள் விரைவாக சந்தையைச் சென்றடையும்
- பயணிகள், பொருட்களின் அசைவு விரைவுபடுத்தப்படும்.
- பௌதிகத்தூரம் குறைவடைவதுடன் நேரம் மீதப்படும்.
- உள்ளக இடப்பெயர்வுப் பாங்கு மாற்றமடையும்
- புதிய கைத்தொழில் வாய்ப்புக்கள் உருவாகும்.

### இலங்கையின் அண்மைக்கால அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

- கிராமஅபிவிருத்தி
- நகர அபிவிருத்தி
- தேசிய பாதுகாப்பு
- அதிவேகநெடுஞ்சாலைகள்
- விமானநிலையம்
- துறைமுகம்
- புகையிரதப்பாதைகள்
- வீதிகள்,
- தொடர்பாடல் மற்றும் தகவல்தொழில் நுட்பம்
- கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்புவசதிகள

### வீதிகளின் அபிவிருத்தி

- இலங்கையின் பாதைத் தொகுதி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் உள்ளது. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளனர்.
  - அதிவேகப் பாதைகள் (E **தரம்**)
  - தேசியப் பெருந்தெருக்கள் (A **மற்றும்** B **தரத்தைச் சேர்ந்தவை**)
  - மாகாணப் பெருந்தெருக்கள் (C **மற்றும்** D **தரத்தைச் சேர்ந்தவை**)



kalvi.lk

- மாகாண நிருவாகத்திற்குரிய வகைப் படுத்தப்படாத பாதைகள் மற்றும் ஏனைய பாதைகள்.

❖ 2014 ஆம் ஆண்டாகும் போது கொழும்பு மாத்தறை, கொழும்பு கட்டுநாயக்க,கொழும்பு புறச்சுற்றுவட்டப் பாதை ஆகிய அதிவேகப் பாதைகளை முதற்கட்டம் நிருமாணித்து முடிக்கப்பட்டுள்ளது.

❖ கண்டி - கொழும்பு, மாத்தறை - அம்பாந்தோட்டை அதிவேகப் பாதைகளின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

❖ பாதை அபிவிருத்தியின் கீழ் வட பகுதி பாதைகளை மறுசீரமைக்கும் பணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. கண்டி- யாழ்ப்பாணம், பரந்தன் - பூநகரி , மாங்குளம், வெள்ளாங்குளம், மட்டக்களப்பு - திருகோணமலை, கரையோரப் பாதைகள் உட்பட உட்பிரதேச பாதைகள் பலவும் ஏற்கனவே திருத்தப்பட்டுள்ளன.

❖ அதற்கு மேலதிகமாக பாதை எழுச்சி (மகநெகும) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமியப் பாதைகள் பலவும் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

❖ தற்போதுள்ள வீதிகளை அகலமாக்கலும் காப்பெற்றிடலும்

❖ மேம்பாலங்கள் அமைத்தல்:- நுகேகொட, றாகம, வியாங்கொட.

❖ தரைக்கீழ் சுரங்கப்பாதை அமைத்தல்:- ரம்பொடை

❖ பயணிகள் நடைபாதைகள் அமைத்தல்:- கொழும்புக்கோட்டை, புறக்கோட்டை, கண்டி

♣ **புகையிரதப்பாதைகள் அபிவிருத்தி**

➢ அதிவேகப் புகையிரதப்பாதைகளை விரிவுபடுத்தல்

➢ வடக்குக்கான புகையிரதப் பாதை மீண்டும் திருத்தியமைத்தல்.

➢ மாத்தறை-கதிர்காமம் உத்தேச புகையிரதப்பாதை திக்குவல்லை வரை நீடித்தல்.

➢ கொழும்பு- யாழ்ப்பாணம் புகையிரதப்பாதை மீள அமைக்கப்பட்டமை.

♣ **துறைமுகங்களின் அபிவிருத்திகள்**


- உருகுணையிலிலுள்ள மாகம்புரவில் மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் தாபிக்கப்பட்டுள்ளது.
- கொழும்பு தெற்கு மற்றும்,ஒலுவில் துறைமுகத்தை நவீன வசதிகளுடன் நிருமாணித்தல்
- இப்பிரதான துறைமுகங்களை அண்டி துறைமுக நகரங்கள் உருவாகியுள்ளன. துறைமுகத்தினுள் தொழிற்சாலைகளை நிறுவுதல், இறங்கு துறைகளை நிறுவுதல் ஆகியன தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
- கப்பல்கள் செப்பனிடும் வசதிகளை மேம்படுத்தல்.
- பழைய துறைமுகங்களின் வசதியை விருத்தி செய்தல். (வடக்கு,கிழக்கு,காலி)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## போக்குவரத்தின் முக்கிய இடங்கள்




### ❖ விமானநிலையங்களின் அபிவிருத்திகள்

- ✓ மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை நிருமாணித்தமை.
- ✓ கட்டுநாயக்காவில் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தை நவீனவசதியுடன் விரிவாக்கல்
- ✓ சிகிரியா, கண்டி, மட்டக்களப்பு அம்பாறை, கொக்கல,திருகோணமலை, நுவரெலியா, பலாலி, ஆகிய நகரங்களில் 8 உள்நாட்டு விமானநிலையங்களை அபிவிருத்தி செய்தல்
- ✓ இரத்மலான விமான நிலையம் நகர்ப்புற விமான நிலையமாக மாற்றப்பட்டுளளது.



kalvi.lk

- ✓ விமானநிலையங்களை அண்டி புதையிரதப் போக்குவரத்து உட்பட ஏனைய உட்கட்டுமான வசதிகள் அபிவிருத்தி செய்யப்படுதல்.
- ✓ பலாலி விமானநிலையம் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையமாக தரமுயர்த்தப்பட்டது.

## ♣ மனிதவளங்களின் அபிவிருத்தி.

- ❖ நாட்டை அபிவிருத்தி செய்யும் போது முக்கிய வளமாக மனிதன் உள்ளான்.
- ❖ மனிதனின் உடல்,உளத்திறன் , ஆன்மீகப் பண்புகளை விருத்தி செய்தல் மனிதவள அபிவிருத்தி எனப்படும்.

### ❖ மனிதவளங்களின் அபிவிருத்திக்கு இலங்கை அரசின் பங்களிப்புக்கள்

- கல்வி,சுகாதாரம்,பாதுகாப்பு இலவசமாக வழங்கப்படுகின்றது.
- புகையிரதம், மோட்டார்வாகனப்போக்குவரத்து சலுகையில் வழங்கப்படுகின்றது.
- ஜனசவிய,சமுர்த்தி, திவிநெகும போன்ற வறுமை ஒழிப்புத்திட்டம் காலத்துக்கு க்காலம் நடைமுறைப்படுத்தல்
- மகநெகும என்ற கிராமமட்டவீதி அபிவிருத்தி நடைமுறைப்படுத்தப்பட்டமை.

### ❖ இலங்கையின் கல்வி அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

- ✓ மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்கல்
- ✓ 5000 ஆரம்பப் பாடசாலைகளையும் 1000 இடைநிலைப் பாடசாலைகளையும் நவீனமயப் படுத்தல்.
- ✓ அரசாங்கப் பாடசாலைகளில் கணினி வசதிகளையும், தகவல் தொடர்பாடல் தொழினுட்ப கல்வி வசதிகளையும் விரிவுபடுத்தல்.
- ✓ உயர்கல்விக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்தல் .அதற்காக 6 பல்கலைக்கழகங்களை சர்வதேச மட்டத்திலான கல்வி நிறுவனங்களாக மாற்றியமைத்தல் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவ ஊக்குவித்தல்
- ✓ தொழினுட்ப மற்றும் தொழில் கல்விக்கான பயிற்சித் துறைகளை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- ✓ தாய்மொழிக்கு மேலதிகமாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை அபிவிருத்தி செய்தல்
- ✓ தொழில் நுட்பப் பாடங்களை உயர்தரத்தில் அறிமுகம் செய்தமை.
- ✓ நவீன விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள்
- ✓ பல்கலைக்கழகங்களில் மாணவர் தொகை அதிகரித்தல்
- ✓ அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலைத்திட்டம்
- ✓ அனைவருக்கும் க.பொ.த உயர்தரக்கல்வி வழங்கும் திட்டம்



kalvi.lk

- **இலங்கையின் சுகாதார அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.**
  - கிராம வைத்தியசாலைகளில் வசதியை மேம்படுத்தல்
  - அதிகளவு வைத்திய நிபுணர்களை வெளிநாட்டுப் பயிற்சிக்கு அனுப்புதல்
  - வைத்தியசாலைப் பணிக்குழுவினரை அதிகரித்தல்
  - நவீன வைத்திய உபகரணங்களைப் பெறுதல்.
  - ஆயுள்வேத மருத்துவத்தைப் பிரபல்யமாக்குதல்
  - தொற்று நோய்கள், தொற்றா நோய்கள் பரவுவதைக் குறைத்தல் மூலம், ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

## பிரதேச அபிவிருத்தி

- **பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்த பின்வரும் நிர்வாகப்பிரிவுகள் உருவாக்கம்.**
  - கிராமங்கள்
  - கிராமசேவகர் பிரிவுகள்
  - பிரதேசசெயலர் பிரிவுகள்
  - மாவட்டசெயலகம்
  - மாகாணநிர்வாகப் பிரிவுகள்

- **கிராம அபிவிருத்தி செயற்றிட்டங்கள்**
  - ஜனசவிய, சமுர்த்தி,திவிநெகும மூலம் ஏழைமக்களை வலுவூட்டல்
  - 200ஆடைத்தொழிற்சாலைகள் நிறுவி வேலையின்மையைக் குறைத்தல்.
  - கிராம வீதிகளை தார்,காப்பெற், கொங்கிறீற் மூலம் புனரமைத்தல்
  - ஒருகிராமத்துக்கு ஒருவேலைத்திட்டம்.
  - கம்திரிய கிராம ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்

- **நகர அபிவிருத்தி செயற்றிட்டங்கள்**
  - ✓ நகர வீதிவிரிவாக்கம் செய்தல்
  - ✓ சட்டவிரோத நடைபாதைக்கட்டடம் அகற்றல், நடைபாதையை பாதசாரிகள் பயன்படுத்துதல்
  - ✓ நகரத்தை அழகுபடுத்தல்.உ-ம். கொழும்பு
  - ✓ புதிய கடைத்தொகுதி அமைத்தல்
  - ✓ கழிவு முகாமைத்துவத்தை சிறப்பாக மேற்கொள்ளல்

- **அறிவை அடிப்படையாகக் கொண்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்**
  - இலங்கையின் தகவல் மற்றும் தெடர்பாடல் தொழினுட்ப பிரதிநிதித்துவ நிறுவனத்தின் (ICTA) மூலம் அச்சேவை வழங்கப்படுகின்றது.

- 2012 ஆம் வருடத்தில் தீவு முழுதும் 60 நெசனல மத்திய நிலையங்களை நிறுவிப் பின்னர் அதன் தொகையை 694 வரை அதிகரித்தல்.
- அரச சேவைகளை வினைத்திறன் மிக்கதாக்க ஈ ஸ்ரீ லங்கா செயன்முறை உதவுகிறது

**❖ அறிவை அடிப்படையாகக் கொண்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் நன்மைகள்**

- நாட்டின் உள்ளுர் வெளியூர் தொடர்புகள் விருத்தியடைதல்.
- கல்விக்கான புதியவழி திறக்கப்படுதல்
- தொழில்வாய்ப்பு ஏற்படுதல்
- சாதாரணமக்களின் அறிவு விரிவாக்குதல்
- அனர்த்த வேளையில் உடனடியாகப் பங்களிப்புச் செய்தல்
- இலத்திரனியல் நிதிசேவைகள் மூலம் கொடுக்கல் வாங்கல் துரிதமாகவும், பாதுகாப்பாகவும் இடம்பெறல்

**❖ தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் பற்றிய அறிவைப் பெறுவதற்கான மூலங்கள்.**

- தொலைத்தொடர்பு ஒழுக்காற்று ஆணைக்குழு மூலம் வசதிகளை வழங்குதல்
- நணசல நிலையங்கள் மற்றும் சேவைவசதிகளை வழங்குவதற்கான லங்கா நிகழ்ச்சித்திட்டம்
- போட்டிமிக்க தனியார் உயர்கல்வி நிறுவனங்கள்.
- இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம்.
- பாடசாலைகளின் இணையவசதிகள்
- பல்கலைக்கழகங்கள் உயர்கல்விநிறுவனங்கள்.
- 2013இல்க.பொ.த.உயர்தர தொழில்நுட்பப்பாடத்தொகுதி

Education கல்வி අධ්‍යාපන

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்

இரண்டாம் தவணை– 2020

தரம் - 11 | புவியியல் | செயலட்டை~1

அலகு:-3, | கற்றல் காலம்:- 4பாடவேளை

# உலக சனத்தொகை

## பகுதி I

1. உலக சனத்தொகை என்றால் என்ன?..........................................................................
.................................................................................................................
2. தற்போதய உலக சனத்தொகை எவ்வளவு?...................................................................
.................................................................................................................
3. உலக சனத்தொகையின் விசேட பண்புகளைத் தருக?......................................................
.................................................................................................................
4. மனிதன் பிறக்கும் முன்னா் உரித்தாகின்ற அம்சங்கள் எவை?..........................................
.................................................................................................................
5. மனிதன் பிறந்த பின்னா் உரித்தாகின்ற அம்சங்கள் எவை? ............................................
.................................................................................................................
6. மனிதன் வளமாகக் கருதப் படுவதற்கான காரணம் இரண்டு தருக?.....................................
.................................................................................................................
.................................................................................................................
7. சனத்தொகைப் பருமன் கூடிய கண்டம் எது? ..........................................................
8. சனத்தொகைப் பருமன் குறைந்த கண்டம் எது?..........................................................
9. உலகில் சனத்தொகைப் பருமன் கூடிய நாடு எது?.......................................................
10. 2050 ஆம் ஆண்டளவில் உலகில் சனத்தொகைப் பருமன் கூடிய நாடாகக் கருதப்படும் நாடு எது?.................................................................................................
11. உலகில் ஆபிரிக்காக் கண்டத்தில் சனத்தொகைப் பருமன் கூடிய நாடு எது?.........................
12. சனத்தொகை வளர்ச்சி என்றால் என்ன? ...........................................................
.................................................................................................................
13. சனத்தொகை வளர்ச்சியை தீர்மானிக்கும் காரணிகள் எவை? ...........................................
.................................................................................................................
14. உலக சனத்தொகை வளர்ச்சிக் காலகட்டம் இரண்டு வகைப்படும் அவை எவை? .........
.................................................................................................................
.................................................................................................................
15. உலக சனத்தொகை வளர்ச்சி வேகம் கூடிய நாடு எது?..................................................
16. உலகில் ஆசியாக் கண்டத்தில் சனத்தொகை வளர்ச்சி வேகம் குறைந்த நாடு எது? .........
.................................................................................................................
17. உலக சனத்தொகைப் பரம்பல் என்றால் என்ன? ......................................................
.................................................................................................................
18. சனத்தொகை அடர்த்தி என்றால் என்ன? ...........................................................
.................................................................................................................



kalvi.lk

19. உலகில் சனத்தொகைப் பரம்பலுக் கேற்ப உலகை **மூன்று** பகுதியாக பிரித்துள்ளனர் அவை எவை? ……………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

20. உலகில் சனத்தொகை அடர்த்தி கூடிய நான்கு வலயங்களையும் தருக?
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

21. உலகில் சனத்தொகை அடர்த்தி மிக்க பிரதேசங்கள் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டு தருக? ……………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

22. உலகின் இரண்டாம் நிலை சனத்தொகை மையங்களைக் குறிப்பிடுக? ……………………..
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

23. உலகில் சனத்தொகை ஐதான பிரதேசங்களைத் தருக? ………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

24. உலகில் சனத்தொகை ஐதான பிரதேசங்கள் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டு தருக? ……………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

25. உலகில் வட அமெரிக்காக் கண்டத்தில் சனத்தொகைப் பருமன் கூடிய நாடு எது?……………………
……………………………………………………………………………………………………

**பகுதி-II**

1) உலகில் சனத்தொகையின் சமனற்ற பரம்பல் மீது செல்வாக்குச் செலுத்தும் பௌதிகக் காரணி ஒன்றைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………



kalvi.lk

2) உலகில் சனத்தொகையின் சமனற்ற பரம்பல் மீது செல்வாக்குச் செலுத்தும் மானிடக் காரணி ஒன்றைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

3) உலகில் சனத்தொகை அடர்த்தி மிக்க பிரதேசம் ஒன்றைக் குறிப்பிட்டு அங்கு மக்கள் செறிவாக வாழ்வதற்கான காரணம் ஒன்றை விளக்குக.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

………………………………………………………………………………………..

4) உலகில் சனத்தொகை ஐதாக உள்ள பிரதேசம் ஒன்றைக் குறிப்பிட்டு அங்கு மக்கள் ஐதாக வாழ்வதற்கான காரணம் ஒன்றை விளக்குக.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

……………………………………………………………………………………….

5) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சனத்தொகை வளர்ச்சி உயர்வாக இருப்பதற்கான காரணம் ஒன்றை விளக்குக.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

**பகுதி III**


1. பின்வருவன வற்றை உலகப் படத்தில் குறித்துக் காட்டுக.

➢ உலகில் சனத்தொகை அடர்த்தி மிக்க நான்கு வலயங்கள்.




kalvi.lk

உலகில் சனத்தொகை அடர்த்தி மிக்க நான்கு வலயங்கள்




➢ உலகில் சனத்தொகை கூடிய முதல் பத்து நாடுகள்.





➢ உலகின் இரண்டாம் நிலை சனத்தொகை மையங்களில் உள்ள பின்வரும் நகரங்கள்.


- நியூயோர்க், பொஸ்ரன், சான்பிரான்ஸ்சிஸ்கோ, றியோடிஜெனிரோ, கெய்ரோ.



kalvi.lk




- உலகில் சனத்தொகை ஐதாக வாழும் இடங்கள்.
    - உயர்ந்த மலைகள்
    - அடர்ந்த காடுகள்
    - பாலைவனங்கள்
    - குளிர் பிரதேசங்கள்






kalvi.lk

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்

இரண்டாம் தவணை– 2020

தரம் - 11 புவியியல் செயலட்டை–2

அலகு:-4 கற்றல் காலம்:- 3பாடவேளை

# இலங்கையின் சனத்தொகை

## பகுதி I

1. இலங்கையில் குடித்தொகைக் கணிப்பை மேற்கொள்ளும் நிறுவனம் எது?
   ..........................................................................................................................
2. இலங்கை முழுவதற்குமான சனத்தொகைக் கணக்கெடுப்பு முதன் முதலில் எடுக்கப்பட்ட ஆண்டு எது?..............................................................................................................
3. இலங்கையின் 2012ஆம் ஆண்டு சனத்தொகைப் பருமனைத் தருக?
   ..........................................................................................................................
4. இலங்கையின் சனத்தொகையின் ஆண்டுக்கான வளர்ச்சி வீதம் கூடிய மாவட்டம் ஒன்று தருக?
   ..........................................................................................................................
5. இலங்கையில் அதிகளவு மக்கள் பரம்பலைக் கொண்ட மாகாணம் எது?
   ..........................................................................................................................
6. இலங்கையில் மக்கள் மிக ஐதாக வாழும் மாவட்டம் எது?
   ..........................................................................................................................
7. இலங்கையில் மக்கள் மிக அடர்த்தியாக வாழும் மாவட்டம் எது?
   ..........................................................................................................................
8. இலங்கையில் மக்கள் தொகை குறைந்த மாகாணம் எது?
   ..........................................................................................................................
9. இலங்கையில் கிராம சனத்தொகை எவ்வளவு?
   ..........................................................................................................................
10. இலங்கையில் வாழும் இலங்கைத் தமிழரின் சதவீதம் எவ்வளவு?
   ..........................................................................................................................

## பகுதி II

1. இலங்கையின் மூன்று வகையான சனத்தொகை வளர்ச்சிக் காலகட்டங்களையும் தருக?
   ..........................................................................................................................
   ..........................................................................................................................
   ..........................................................................................................................
2. இலங்கையில் கொழும்பு நகரில் மக்கள் செறிவாக வாழ்வதற்கான காரணங்கள் மூன்று தருக?

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

3. இலங்கையின் வடமாகாணத்தில் மக்கள் மிகவும் குறைவாக இருப்பதற்கான காரணங்கள் மூன்று தருக?

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

4. இலங்கையின் சனத்தொகைக் கட்டமைப்பின் விசேட பண்புகள் மூன்று தருக?

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

5. இலங்கையில் முதியோர் தொகை அதிகரிப்பதால் ஏற்படும் பிரச்சினைகள் இரண்டைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

6. இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் நாடாக இருந்தபோதிலும் அபிவிருத்தி அடைந்த நாட்டின் சனத்தொகை அம்சங்களைக் கொண்டமைக்கான காரணங்கள் மூன்று தருக?

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

7. சுனத்தொகையின் இயற்கை வளர்ச்சிவீதத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை?

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

8. இலங்கையின சனத்தொகைக் கட்டமைப்பில் உள்ளடங்குபவை எவை?

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

9. இலங்கையின் உலர்வலயத்தில் சனத்தொகை வளர்ச்சி உயர்வாக இருப்பதற்கான காரணங்கள் மூன்று தருக?

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

10. இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி என்றால் என்ன? அவற்றைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை?

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………



kalvi.lk

**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்குமாகாணம்**

**இரண்டாம் தவணை– 2020**

**தரம் - 11** | **புவியியல்** | **செயலட்டை~3**

**அலகு:-5** | **கற்றல் காலம்:- 4பாடவேளை**

# அபிவிருத்தி

1) ஒரு நாட்டில் நிலவிய பொருளாதார அபிவிருத்தியே அபிவிருத்தி எனப்படும். எனக் கருதப் பட்ட காலம் யாது?
.......................................................................................................................................

2) மானிட அபிவிருத்தி உயர்வாக உள்ள சார்க் நாடு எது?
.......................................................................................................................................

3) வடமாகாணத்தில் உருவாக்கப்பட்ட சர்வதேச விமானநிலையம் எது?
.......................................................................................................................................

4) இலங்கையில் முதலில் அமைக்கப்பட்ட அதிவேகப்பாதை எது?
.......................................................................................................................................

5) இலங்கையில் அமைக்கப்பட்ட தரைக்கீழ் சுரங்கப்பாதை ஒன்றின் பெயர் தருக?
.......................................................................................................................................

6) உருகுணையில் புதிதாக அமைக்கப்பட்ட சர்வதேச துறைமுகம் எது?
.......................................................................................................................................

7) தென் மாகாணத்தில் அமைந்துள்ள சர்வதேச விமானநிலையம் எது?
.......................................................................................................................................

8) இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்கு தற்போது நடைமுறையிலுள்ள செயற்றிட்டம் எது?
.......................................................................................................................................

9) க.பொ.த.உயர்தரத்தில் தொழில்நுட்பப் பாடத்தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டஆண்டு எது?
.......................................................................................................................................

10) ‘சனத்தொகை, சமூக, கலாச்சார, மற்றும் ஒழுக்கம் ஆகிய காரணிகளுடன் தொடர்புபட்டுள்ள தொடர்ச்சியான செயன்முறை’ அபிவிருத்தி எனப்படும் இவ் வரைவிலக்கணத்தைக் கூறிய அமைப்பு எது?
.......................................................................................................................................

## பகுதி II

1) அபிவிருத்தி என்றால் என்ன என்பதற்கு டட்லி சியர்ஸ் கூறிய கருத்து யாது?
.......................................................................................................................................
.......................................................................................................................................
.......................................................................................................................................

2) அபிவிருத்தியை அளவிடும் நவீன குறிகாட்டிகள் மூன்று தருக?
.......................................................................................................................................



kalvi.lk

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

3) அபிவிருத்தியை அளவிடும் பழைய குறிகாட்டிகள் மூன்று தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

4) தற்காலத்தில் மனித அபிவிருத்திச் சுட்டியைத் தயாரிக்கும் போது மூன்று குறிகாட்டிகள் உள்ளடக்கப்பட்டன. அவற்றைக் குறிப்பிடுக.?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

5) இலங்கையின் மேற்கொள்ளப்பட்ட நகர அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மூன்று தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

6) நிலைபேண் அபிவிருத்தி என்றால் என்ன?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

7) நிலைபேண் அபிவிருத்தியின் நோக்கம் யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

8) இலங்கையில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதால் ஏற்படும் நன்மைகள் மூன்று தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

9) இலங்கையின் அண்மைக்கால அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மூன்று தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

Education கல்வி අධ්‍යාපන

10) கொழும்பு துறைமுக நகரை அண்டி மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் மூன்று தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

11) இலங்கையின் கல்வி அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூன்று தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

12) இலங்கையின் சுகாதார அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூன்று தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

13) இலங்கையின் மேற்கொள்ளப்பட்ட கிராம அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மூன்று தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

Education கல்வி අධ්‍යාපන

14) அறிவை அடிப்படையாகக் கொண்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் நன்மைகள் மூன்று தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

15) தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் பற்றிய அறிவைப் பெறுவதற்கான மூலங்கள் மூன்று தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

## பகுதி III

❖ **பின்வருவனவற்றை கீழே தரப்பட்ட இலங்கைப்படத்தில் குறித்துப் பெயரிடுக.**

1. சர்வதேச விமான நிலையம்:- கட்டுநாயக்கா,யாழ்ப்பாணம்,மத்தள.



kalvi.lk


2. துறைமுகங்கள்:- காங்கேசன்துறை, கொழும்பு, மாகம்புர, காலி, திருகோணமலை

3. அதிவேக நெடுஞ்சாலை:- கொழும்பு -மாத்தறை, கொழும்பு- கட்டுநாயக்க

4. உள்ளூர் விமானநிலையம்:- இரத்மலானை, வவுனியா, மட்டக்களப்பு

5. பிரதான வீதிகள்:- A1, A9

**போக்குவரத்தின் முக்கிய இடங்கள்**






kalvi.lk